டிஜிட்டல் டெய்லி

அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 11.9.2024 புதன்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 071 - Madurai | Online Edition

# பிரதமரின் மீனவர் நலத்திட்ட தொடக்கம்

## மத்திய அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் பங்கேற்பு

புதுதில்லி. செப்.10

மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் என்கிற லாலன் சிங், பிரதமரின் மீனவர் நல திட்டத்தையும், பிரதமரின் மீன்வள திட்டத்தின் 4-வது ஆண்டு விழாவில் மீன்வளத் துறையில் உற்பத்தி மற்றும் பதப்படுத்தும் தொகுப்புகளுக்கான நிலையான இயக்க நடைமுறையையும் தொடங்கி வைக்கிறார்.

மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களின் மீன்வளத் துறையின் பிரதிநிதிகள், மீன்வளத் துறை, தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம், ஐ.சி.ஏ.ஆர் நிறுவனங்கள் மற்றும் பிற தொடர்புடைய துறைகள்/அமைச்சகங்களின் அதிகாரிகள், பிரதமரின் மீன் வளத் திட்ட பயனாளிகள், மீனவர்கள், மீன் விவசாயிகள், தொழில் முனைவோர் மற்றும் நாடு முழுவதும் இருந்து மீன்வளத் துறையில் ஈடுபட்டுள்ள முக்கிய பங்குதாரர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் அதிகரிப்பு, அறுவடைக்குப் பிந்தைய உள்கட்டமைப்பு மற்றும் பிற மதிப்புச் சங்கிலி பெருக்க தலையீடுகள் தொடர்பாக பிரதமரின் மீன்வள திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட பல்வேறு திட்டங்களை மத்திய அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் அறிவிக்கிறார். 2024-25 நிதியாண்டில் பிரதமரின் மீன்வளத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட தேசிய முன்னுரிமைத் திட்டங்கள், கையேடுகள் வெளியீடு, சிறப்பு மையம் மற்றும் இனப்பெருக்க மையங்களை அறிவித்தல், கடலோர மீனவ கிராமங்களை, பருவநிலையை தாக்குப் பிடிக்கும் கடலோர மீனவ கிராமங்கள் மற்றும் மீன்வள தொகுப்புகளாக மேம்படுத்துவது குறித்து அறிவிக்கை செய்தல் மற்றும் டிஜிட்டல் இணையதளத்தை தொடங்குதல் போன்றவை

பிரதமரின் மீன்வளத் திட்டத்தின் நான்காவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் போது முன்னிலைப்படுத்தப்படும் முக்கிய நடவடிக்கைகளாகும்.

2014-ம் ஆண்டு முதல் ரூ.38,572 கோடி முதலீடு செய்வதற் கான திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துவதன் மூலம் நீலப் புரட்சியின் மூலம் மீன்வளத் துறையின் மாற்றத்தை இந்திய அரசு முன்னெடுத்துள்ளது.

பிரதமரின் மீன்வளத்திட்டம் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில், உருவெடுத்துள்ளது. இந்த தொலை நோக்குத் திட்டம், இந்திய அரசின் மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகத்தின் கீழ், மீன் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன், தரம், தொழில்நுட்பம், அறுவடைக்குப் பிந்தைய உள்கட்டமைப்பு மற்றும் மேலாண்மை, நவீனமய மாக்கல் மற்றும் மதிப்புச் சங்கிலியை வலுப்படுத்துதல், தடமறிதல், வலுவான மீன்வள மேலாண்மை கட்டமைப்பை நிறுவுதல் மற்றும் மீனவர் களின் நலன் ஆகியவற்றில் முக்கியமான இடைவெளிகளை நிறைவு செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

பிரதமரின் மீன்வள திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சீர் திருத்தங்கள் மற்றும் முன்முயற்சிகள், முக்கிய உட்கட்டமைப்பு மேம்பாடு, இந்திய மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்புத் துறையை நவீனப்படுத்துதல், குறிப்பாக புதிய மீன்பிடி துறை முகங்கள் / இறங்கு தளங்களை உருவாக்குதல், பாரம்பரிய மீனவர் கைவினைப் படகுகள் – இழுவைப் படகுகள் – ஆழ்கடலில் செல்லும் கப்பல்களை நவீனப்படுத்துதல் மற்றும் இயந்திரமயமாக்குதல், நாட்டில் மீன்வளர்ப்பை ஊக்குவிப்பதற் கான தரமான தீவனம் மற்றும் விதைகள் வழங்குதல் ஆகியவற்றை வலியுறுத்துகின்றன.

இது மீனவர்கள், மீன் விவசாயிகள், தொழில்முனைவோர், பிற பங்குதாரர்கள், அரசு அதிகாரிகள் மற்றும் துடிப்பான மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்புத் துறையிலிருந்து ஆர்வமுள்ள பங்கேற் பாளர்களை ஒன்றிணைக்கும் ஒரு சிறந்த நிகழ்வாகும். இந்த நிகழ்ச்சி பிரதமரின் மீன்வளத் திட்டத்தின் சாதனைகளையும், மத்திய அரசின் மீன்வளத் துறையால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களையும் வெளிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த நிகழ்ச்சி பிரதமரின் மீன் வளத்திட்டத்தின் சாதனைகள் மற்றும் இந்திய அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை வெளிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# மிட்டாய்கள் தயாரிக்கும் பயிற்சி

கோயம்புத்தூர், செப்.10

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மிட்டாய்கள் தயாரிக்கும் பயிற்சி வருகிற 13.9.24ஆம் தேதியில் நடைபெறுகிறது. சாக்லேட் மற்றும் மிட்டாய் வகைகளுக்கு தற்பொழுதுமக்கள் மத்தியில், அதிக வரவேற்பு உள்ளது. அதற்கான முக்கியக் காரணம் விரும்பத்தக்க வகையிலும் பற்சுவைகளிலும் மிக எளிதில் இவை கிடைப்பதேயாகும்.

இப்பயிற்சி சிறுதொழில் முனைவோருக்கு தங்களது வருமானத்தைப் பெருக்க பெரிதும் உதவியாக இருக்கும். ஆகவே, பயிற்சியின் போது கீழ்க்காணும் சாக்லேட் மற்றும் மிட்டாய் வகைகள் எளியமுறையில் தயாரிப்பதற்கான தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவையாவன:

- சாக்லேட்
- கடலை மிட்டாய்
- சர்க்கரை மிட்டாய் வகைகள்

இத்தொழில்நுட்பத்தில் ஆர்வமுள்ளவர்கள் ரூ.750 + GST 18% செலுத்தி தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளலாம்.

பயிற்சியானது அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், (வாயில் எண்.7, மருதமலை சாலை) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்– 641003ல் நடைபெறுகிறது.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641 003. தொலைபேசி எண் : 94885 18268, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.



இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# அருப்புக்கோட்டை வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் மின்னனு பண பரிவர்த்தனை மூலம் இடுபொருட்கள் விநியோகம்

விருதுநகர், செப்.10

சம்பா மற்றும் ராபி பருவத்திற்கு தேவையான விதைகள், நுண்ணூட்ட கலவைகள், உயிர் உரங்கள் உள்ளிட்ட இடுபொருட்கள் அருப்புக்கோட்டை வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில், விவசாயிகள் தங்களுக்கு




தேவையான வேளாண் இடுபொருட்களை ஏ.டி.எம் கார்டு, கூகுள் பே, போன் பே உள்ளிட்ட பணம் இல்லா மின்னனு பரிவர்த்தனை மூலம் அரசு கணக்கில் செலுத்தி இடுபொருட்கள் பெறுவதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கான கருவி அருப்புக்கோட்டை வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே வேளாண்மை விரிவாக்க மையம் மூலம் இடுபொருட்களை வாங்க வரும் விவசாயிகள் இடுபொருட்களுக்கான முழு தொகை அல்லது பங்களிப்பு தொகையை மின்னனு பரிவர்த்தனை மூலமாக செலுத்தி வேளாண் இடுபொருட்களை பெற்று பயனடையலாம்.

இந்த தகவலை வேளாண்மை உதவி இயக்குநர் ரா.பத்மாவதி தெரிவித்துள்ளார் .

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

| கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் | | | | | | | 10.09.2024 |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1 | கத்திரி(Hybrid) | 30 | 36 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 35 | 40 | 57 | உருளை (பிற) | 36 | 42 |
| 1B | கத்திரி(Nadu) | 52 | 56 | 57A | உருளை(ஊட்டி) | 60 | 65 |
| 2 | வெண்டை | 20 | 24 | 58 | மேரக்காய் | 15 | 20 |
| 3 | தக்காளி (நாடு) | 20 | 24 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 30 | 36 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 18 | 22 | 60 | கேரட் | 70 | 75 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 55 | 60 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 55 | 60 |
| 6 | புடலை | 25 | 28 | 62 | நூல்கோல் | 40 | 46 |
| 7 | பீர்க்கன் | 25 | 30 | 63 | டர்னிப் | 45 | 50 |
| 8 | சுரைக்காய் | 18 | 22 | 64 | மு.கோஸ் | 18 | 22 |
| 9 | பாகற்காய் | 25 | 30 | 65 | மு.கோஸ்(கலர்) | 30 | 35 |
| 10 | கொத்தவரை | 22 | 28 | 66 | காளிபிளவர் | 50 | 58 |
| 11 | பூசணி | 15 | 20 | 67 | பட்டாணி | 170 | 175 |
| 12 | அரசாணி | 15 | 20 | 68 | பூண்டு | 260 | 314 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 35 | 38 | 69 | இஞ்சி | 60 | 134 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 40 | 46 | 70 | புருக்கோலின் | 100 | 120 |
| 15 | சி.வெங்காயம் | 38 | 42 | 71 | பென்னி பீன்ஸ் | 75 | 80 |
| 16 | பெ.வெங்காயம் | 50 | 54 | 72 | குடமிளகாய் | 48 | 54 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 22 | 26 | 73 | ஊட்டி அவரை | 110 | 130 |
| 18 | பச்சை மொச்சை | 50 | 54 | 74 | பஜ்ஜி மிளகாய் | 40 | 45 |
| 19 | முருங்கை | 30 | 34 | 71A | | | |
| 20 | தேங்காய் | 35 | 38 | | | | |
| 21 | | | | | | | |
| 22 | வாழைக்காய் | 38 | 42 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 58 | 62 | | | | |
| 24 | | | | 75 | எலுமிச்சை | 140 | 150 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு | 50 | 75 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 42 | 48 | 78 | பப்பாளி | 35 | 38 |
| 28 | கறிவேப்பிலை | 28 | 32 | 79 | மாதுளை | 200 | 240 |
| 29 | கொத்தமல்லி | 90 | 95 | 80 | திராட்சை | 100 | 110 |
| 30 | புதினா | 10 | 11 | 81 | மாம்பழம் | 100 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் / காலா | 200 | 240 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்சு | 90 | 100 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 45 | 50 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 60 | 70 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 50 | 55 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 85 | 90 |
| 40 | கோவக்காய் | 25 | 30 | 91 | பூவன் | 50 | 55 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 55 | 60 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 55 | 60 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 18 | 22 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 30 | 36 | 96 | நேந்திரன் | 40 | 50 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 25 | 30 | 97 | செவ்வாழை | 80 | 85 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 60 | 65 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 28 | 30 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 28 | 32 | | | | |

# விதை விற்பனை நிலையங்களில்
# சென்னை விதை ஆய்வு இணை இயக்குநர் ஆய்வு

விருதுநகர், செப்.10

விருதுநகர் மாவட்டத்தில் அரசு மற்றும் தனியார் விதை விற்பனை நிலையங்களில் விவசாயிகளுக்கு தரமான விதைகள் வழங்கப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு சென்னை விதை ஆய்வு இணை இயக்கநர் ரவி 9.9.24 அன்று திடீர் ஆய்வு மேற்கொண்டார்.



விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை மற்றும் சாத்தூர் வட்டாரங்களில் அரசு மற்றும் தனியார் விதை விற்பனை நிலையங்களில் ஆய்வு மேற்கொண்டு விற்பனை செய்யும் விதைகளுக்கு உரிய கொள்முதல் பட்டியல்கள், விற்பனை பட்டியல்கள், இருப்பு பதிவேடு, பதிவுறுச் சான்றிதழ் மற்றும் முளைப்புத் திறன் அறிக்கை போன்ற ஆவணங்கள் உரிய முறையில் பராமரிக்கப்படுகிறதா என்பதை ஆய்வு செய்தார்.

விதை விற்பனையாளர்கள் இருப்பு பதிவேடு, கொள்முதல் பட்டியல்கள், முளைப்புத்திறன் அறிக்கைகள், பதிவுறுச் சான்றிதழ்கள், விற்பனை பட்டியல், விதைகளின் இருப்பு விபரம் மற்றும் விற்பனை விலை பலகை உரிய முறையில் பராமரிக்கவும், விதைகள் இருப்புவைக்கும் பொழுது தரத்தில் குறைபாடு ஏற்படாதவாறு உரிய நடைமுறைகளை கடைபிடிக்கவும் அறிவுறுத்தினார்.

விவசாயிகளுக்கு விதைகள் விற்பனை செய்யும் பொழுது விற்பனை பட்டியலில் விதை குவியல் எண் மற்றும் காலவதி நாள் குறிப்பிட்டு பட்டியல் வழங்கிடவேண்டும் என அறிவுறுத்தினார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

மேலும் விற்பனை பட்டியலில் விவசாயின் பெயர் மற்றும் முகவரி, கைபேசி எண் குறிப்பிடுவதுடன் விவசாயின் கையொப்பம் பெற வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

விதை விற்பனை நிலையத்தில் விதைகள் வாங்கும் விவசாயிகள் விபரம் பராமரித்திடவும் அறிவுரை வழங்கினார். விதைகள் சட்டம் விதிமுறைகளை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடுத்தார்.

ஆய்வின் போது சென்னை விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு இயக்கக விதை ஆய்வாளர் (தொழில் நுட்பம்) செல்வக்குமார், விருதுநகர் விதை ஆய்வு துணை இயக்கநர் ஆ.வனஜா மற்றும் விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்ட விதை ஆய்வாளர்கள் உடன் இருந்தனர்.

## தலைக் கவசம் உயிர்க் கவசம்
## முறையாக தலைக் கவசம் அணிவோம்



# பெருந்துறை வட்டாரத்தில் வட்டார அளவிலான விவசாயிகள் ஆலோசனைக் குழு கூட்டம்



ஈரோடு, செப்,10

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டாரம், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் வாயிலாக செயல்படுத்தப்படும் மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் 2024-25 ஆம் ஆண்டுக்கான வட்டார விவசாயிகள் ஆலோசனை குழுக்கூட்டமானது க.பிரசாத், வேளாண்மை உதவி இயக்குநர் முன்னிலையிலும் அட்மா திட்ட தலைவர் மு.இராஜேந்திரன் தலைமையில் பெருந்துறை ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையத்தில் 10.09.24 அன்று நடைபெற்றது.

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் குறித்து பேசினர். மேலும் வேளாண் உழவர் நலத்துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் மானிய விவரங்கள், வேளாண்மை கிடங்கில் உள்ள நுண்ணூட்டம், உயிர் உரங்கள் குறித்தும் அவற்றை பயன்படுத்தும் முறை குறித்தும் விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தனர். மேலும் தோட்டக்கலை உதவி அலுவலர் ஜீவிதா பேசுகையில் மாடித்தோட்டம் சாகுபடி குறித்தும் அவற்றை பயன்படுத்தும் முறை குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர். வேளாண் பொறியியல்துறையை சார்ந்த உதவிப்பொறியாளர் நவீன் பேசுகையில் தங்களது துறை சர்ந்த திட்டங்கள் பற்றி கூறினார்.

மேலும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் விசுவநாதன் மற்றும் தாமோதரன் அட்மா திட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றம் உழவன் செயலி பதிவிறக்கம் செய்தல் மற்றும் அவற்றை பயன்படுத்தும் முறை குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் செய்திருந்தனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
IFFCO
NANO
UREA
PLUS
இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி
பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# வேளாண் இடுபொருட்கள் மின்னணு பரிவர்த்தனையில் பெறலாம்

புதுக்கோட்டை, செப்.10

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் வேளாண் இடுபொருட்கள் பணமில்லா மின்னணு பரிவர்த்தனை மூலம் விநியோகம் செய்யப்படுவதாக வேளாண்மை உதவி இயக்குநர் க.வெற்றிவேல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது, திருவரங்குளம் வட்டாரத்தில் சம்பா பருவத்திற்கு தேவையான உயர் விளைச்சல் சன்ன ரக நெல் விதை ஆடுதுறை 54, நுண்ணுயிர் உரங்கள், நுண்ணூட்டக் கலவைகள் மற்றும் பயறு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்குத் தேவையான வம்பன் 8 உளுந்து, துவரை போன்ற பயறு வகைகளின் விதைகள் தேவையான அளவு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த வேளாண் இடுபொருட்கள் பல்வேறு திட்டங்களில் மானிய விலையில் விவசாயிகள் பெறலாம்.

விவசாயிகள் வேளாண் இடுபொருட்களை பணம் இல்லா பரிவர்த்தனையில் வாங்கலாம். அதாவது ஏடீஎம் கிரேடிட் கார்டு அல்லது டெபிட் கார்டு, இகூகுள் பே, போன் பே போன்றவை மூலம் பணம் செலுத்தலாம்.

விவசாயிகள் தங்கள் வாங்கும் வேளாண் இடுபொருட்ளின் முழுவிலையினையோ அல்லது விவசாயிகளின் பங்கு தொகையினையோ ரொக்கமாக பணத்தை கொண்டு வர வேண்டிய அவசியம் இல்லை. இதற்கு தமிழக வேளாண்மைத்துறை திருவரங்குளம் வேளாண்மை விரிவாக்க மையத்தில் பி.ஓ.எஸ் மிஷின் என்ற விற்பனை முனைய கருவி மூலம் விற்பனை செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது. இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# குறைந்த பட்ச ஆதார விலை (MSP) கணக்கிடுவது எப்படி?

குறிப்பிட்ட பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலையை மத்திய அரசு (MINIMUM SUPPORT PRICE) உறுதி செய்யும் சட்டம் இயற்றப்பட்டு அதாவது 1965 முதல் நடைமுறை படுத்தப் பட்டு வருகிறது. இதற்கான பரிந்துரையை அரசு வழங்குவது சிஏசிபி (CACP) எனப்படும் மத்திய விவசாய செலவுகள் விலைகள் ஆணையம் தான் என்பது நம்மில் பலருக்கும் தெரியாத நிலை தான்.



**எப்படி கணக்கீடுவது?**

1) பயிர்களுக்கான இரு பருவங்கள் அதாவது காரீப் மற்றும் ராபி பருவங்களில் தான் பெரும்பாலான பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. அந்த காலகட்டத்தில் இடுபொருள் (விதை, உரம் பூச்சி மருந்து) விலைகள், சாகுபடிக்கான செலவுகள் பயிர் களின் உற்பத்தி தேவை, உலக சந்தைகளில் பயிர்களின் விலையில் ஏற்படும் காரணிகளை கணித்து தான், MSP நிர்ணயிக்கப்படுகிறது.

2) குறைந்தபட்ச ஆதார விலையை நிர்ணயிப்பதற்காக, விவசாய செலவுகள் விலைகள் ஆணையம் எடுத்துக் கொள்ளும் காரணிகள் 9.

3) இதில் 2018 வரை எம்.எஸ்.பி இரு செலவுச் சூத்திரத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது.

மற்றொரு சூத்திரத்தின்படி (C-2 FORMULA) பயிர் சாகுபடிக் காக செய்யப்படும் அனைத்து செலவுகளும் எடுத்துக் கொள்ளப்படும். இதில் (A2) செலவுக்காரணி (விலை) யின்படி, பயிர் சாகுபடிக்காக விவசாயிகளால், கையிலிருந்து செய்யப் படும் சாகுபடி செலவு மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

அதாவது நாம் குறிப்பிட்ட 9 வகை வெவ்வேறு விலைக் காரணிகளில், இரு காரணிச்சூத்திரங்களை, வைத்து (A2+FL) விவசாயிகளின் செலவுக்கணக்கில் இயந்திரங்களுக்கு செய்யப்படும் முதலீடு, அதன் தேய்மானச் செலவு, பயிர் கடனுக்கான வட்டி, போன்றவற்றை கணக்கில் எடுத்துக் கொள்ளுவதில்லை.

**ஏன் குறைந்த பட்ச ஆதார விலை தேவை?**

இந்தியாவில் மக்கள் தொகையில் பாதிக்கு மேல் விவசாயத்தை நம்பி தான் வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். எந்த விவசாயியும் தங்களுடைய விளை பொருளை கட்டு படியான விலையில் விற்க முடியாத நிலையில் தான் உள்ளனர். விவசாயம் என்பது நிச்சயமற்ற வருவாய் ஈட்டும் தொழிலாகவே உள்ளது. ஏனெனில் வறட்சி மற்றும் வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்படுவது விவசாய விளை பொருள் தான். எனவே தான் விவசாயிகளுக்கு குறைந்த பட்ச ஆதார விலை கண்டிப்பாக தேவைபடுகிறது.

**ஆதார விலைக்கு மாநில அரசு ஊக்கத்தொகை வழங்கப் படுகிறதா?**

ஆம், இந்தாண்டில் கூட மத்திய அரசு நெல்லும் (சன்ன ரக த்திற்கு) MSPயாக 2320/குவிண்டாலுக்கு மத்திய அரசு அறிவித்துள்ள நிலையில் மாநில அரசு ஊக்கத் தொகையாக 130 அறிவித்து விற்பனை தொகையாக 2450யாக 1.9.24 முதல் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் (DPC) கொள்முதல் செய்யப்படுகிறது.

**எந்த பயிருக்கு MSP உள்ளது?**

தற்போதைய நிலையில் 23 பயிர்களுக்கு தான் குறைந்த பட்ச ஆதார விலை நிர்ணயிக்கப்படுகிறது. இதை தவிர கடுகு, கொப்பரை தேங்காய் ஆகியவற்றிற்கும் MSP உள்ளது.

பயிர்களின் உற்பத்தி விலையின் 1.5 மடங்கு என்ற அளவிற்கு குறைந்த பட்ச ஆதார விலை நிர்ணயிக்கப் படுகிறது.

**MSP உறுதிச் சட்டம் விவசாயிகளுக்கு 100% தீர்வை தருமா?**

இல்லை என்பது தான் தற்போதைய நிலை. தற்போது உற்பத்தி செலவை கணக்கிடும் முறை முழுமையான தரவுகளில் செய்யப்படுவதில்லை.

100% உற்பத்திச் செலவின் அடிப்படையில் அனைத்துப் பயிர்களுக்கு ஏற்ற கொள்முதல் கொள்கை ஒன்றே விவசாய வருமானம் உயர சரியான தீர்வு காண முடியும். டாக்டர் M.S. சுவாமிநாதன் தலைமையிலான தேசிய விவசாயிகள் ஆணையமானது பயிரின் சாரசரி உற்பத்தி விலையை விட னிறீஊண யானது 50% அதிகமாக இருக்க வேண்டுமென பரிந்துரைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இதை யெல்லாம் கருத்தில் கொண்டு, மத்திய, மாநில அரசுகள் விவசாயிகளுக்கு கட்டுபடியான விலையை நிர்ணயிக்க வேண்டும் என்பதே விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கை யாகும். விலைவாசி நாளுக்கு நாள் உயர்ந்தாலும் விளை பொருளின் விலை சில சமயங்களில் பரிதாபமாக உள்ளது என்பது தான் உண்மை.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**


Stanes
BIO NEMATON
Bio Pesticide
Paecilomyces lilacinus
1.15% Powder Formulation
Net Content 1 kg
பயோ நெமட்டான்
பயிரின் வேர்களை தாக்கும் நூற்புழு பிரச்சனையா?
பயன்படுத்துவீர்...
பயோ நெமட்டான்
"நூற்புழுக்களின் எதிரி"
இது வேர்களைத் தாக்கும் தீமை செய்யும் நூற்புழுக்களையும் அதன் முட்டைகளின் செயல்பாட்டையும் தடுக்கிறது.
• அரோக்கியமான வேர் வளர்ச்சிக்கு உதவுகிறது.
• பூஞ்சாண (அ) பாக்டீரியா நோய்கள் வரும் அபாயத்தை குறைக்கிறது.
• மேலும் நல்ல மகசூல் கிடைக்க வழிவகை செய்கிறது.
வேர் முடிச்சுகள்
வேர் வீக்கம்
வேர் அழுகல்
டி ஸ்டேன்ஸ் அண்ட் கம்பெனி லிமிடெட்
8/23-24, ரேஸ் கோர்ஸ்,
கோவை-641018.
www.tstanes.com
84899 04949
தமிழ்நாடு மேலாளர் : 91 93449 14955
கோவை, ஈரோடு : 91 93449 14956
சேலம் : 91 93449 14948
திருச்சி : 91 93449 14943
மதுரை : 91 93449 14935
வேலூர் : 91 93449 14938

# விதைகளை பரிசோதிக்க விவசாயிகளுக்கு அழைப்பு

திருவண்ணாமலை மாவட்டத்தில் தற்போது பரவலாக மழை பெய்து இருப்பதால் விவசாயிகள் தங்களிடம் உள்ள நெல் விதைகளை விதைப்பிற்கு முன் விதைகளின் தரத்தினை பரிசோதனை செய்து கொள்ளலாம். விதைகளை பரிசோதனை செய்வதன் மூலம் இடுபொருட்கள் செலவினை குறைத்து தரமான விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டும்.

குறைந்த செலவில் அதிக மகசூல் பெற விதைபரிசோதனை செய்தபின் விதைகளை பயன்படுத்துவதன் மூலம் விதைகளின் முளைப்புதிறன் குறைபாடு இல்லாமல் இருப்பதையும் விதைகளில் பிற இரக விதைகள் உள்ளதா என்பதை அறிவதன் மூலம் கலப்பு விதைகள் பயன்படுத்துவதை தவிர்க்கலாம். மேலும் விதையின் ஈரப்பதம் மற்றும் சுத்தத்தன்மை ஆகிய வற்றை அறிந்து பயன்படுத்துவதன் மூலம் பயன்படுத்தும் விதைகள் முளைக்க தரமானதா என்பதை தெரிந்து கொள்ளலாம்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அரசு விதைப்பரிசோதனை நிலையத்தில் விவசாய பெருமக்கள் தங்களிடம் உள்ள விதைகளை அனுப்பி அவற்றின் ஈரப்பதம், பிற இரக கலவன், முளைப்புத்திறன், புறத்தூய்மை மற்றும் பூச்சி நோய் தாக்குதல் ஆகியனவற்றை பரிசோதனை செய்து அதன்பின்பு விதைப்பு செய்து அதிக மகசூல் பெற்று கூடுதல் லாபம் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது. விதை மாதிரிகளை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம். விதைகளை அனுப்பும் போது பயிரின் பெயர், இரகம் மற்றும் குவியல் எண் ஆகியவை குறிப்பிட்ட விண்ணப்ப படிவத்துடன் ஒரு மாதிரிக்கு ரூ.80/- வீதம் விதைப் பரிசோதனைக் கட்டணம் சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

விதை மாதிரிகளை மூத்த வேளாண்மை அலுவலர், விதைப் பரிசோதனை நிலையம், டாங்காப் கட்டிடம், வேங்கிக்கால், திருவண்ணாமலை 606 604 என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

# கரும்பு தோகை மட்கு உரம் இடுவதால் ஏற்படும் நன்மைகள்

மண்ணின் இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் தன்மை மேம்படுகிறது.

மண்ணின் மின்கடத்தும் திறன் குறைந்து, நீரைத் தக்கவைக்கும் திறன் அதிகரிக்கிறது.



மண்ணில் உள்ள நுண்துளைகளினால் மண்ணின் கட்டமைப்பு அதிகரிக்கிறது.

மண்ணின் அடர்த்தி குறைகிறது. மண்ணின் ஊடுருவும் திறன் அதிகரிக்கிறது. மண்ணின் அங்கக தன்மை அதிகரிக்கிறது. மண்ணில் ஊட்டச்சத்துக்களின் அளவும் அதிகரிக்கின்றது.

மக்கிய உரம் எக்டருக்கு பரிந்துரை 5 டன் என சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வேலு தெரிவித்தார்.

# விவசாயிகளுக்கு பூச்சிக்கொல்லிகளைக் கையாளும் முறைகளை செயல் விளக்கமாக செய்து காட்டிய வேளாண் கல்லூரி மாணவர்கள்



திண்டுக்கல், செப்.10

திண்டுக்கல் காந்திகிராம பல்கலைக்கழக வேளாண் மாணவர்கள் ச.அன்புநிதி, சு.ஜெகதீஸ், மா.மனோ, சு.விவேகானந்தன், ம. ஹரிஹரன் கிராம தங்கல் திட்டத்தின் கீழ் சுருளிப்பட்டியில் தங்கி, விவசாயிகளுக்கு வேளாண் தொழில்நுட்ப பயிற்சிகளை அளித்து வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக விவசாயிகளுக்கு பூச்சிக்கொல்லிகளைக் கையாளும் முறைகளைச் செயல் விளக்கம் செய்தனர். இந்நிகழ்ச்சியில் பாதுகாப்பு உபகரணங்களை அணிவது, மருந்து கலவையைச் சரியான அளவில் தயாரித்தல், தூய்மையான நீர் பயன் படுத்துதல், காற்று மிதமாக இருக்கும் பொழுது தெளித்தல் போன்ற முக்கிய அம்சங்களை விவசாயிகளுக்கு செயல் முறையாகக் கற்றுக்கொடுத்தனர். மேலும், மருந்து தெளிப் பிற்குப் பின் சுகாதார பராமரிப்பு முறைகளைப் பற்றியும் பூச்சிக் கொல்லி மருந்து தெளிக்கும் பொழுது ஏற்படும் விபத்துக் களைத் தடுக்க சில பாதுகாப்பு முறைகள் குறித்தும் விவாதித்தனர். இப்பயிற்சியின் மூலம் விவசாயிகள் பாது காப்பாக பூச்சிக்கொல்லிகளைக் கையாளும் திறன்களைக் கற்றுக் கொண்டனர். இப்பாதுகாப்பு முறைகளைப் பின் பற்றுவதன் மூலம் விபத்துகளைத் தவிர்த்து, விவசாயிகள் தங்கள் செயல்பாடுகளைச் சுகாதாரமான முறையில் மேற் கொள்ளலாம்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தமிழக முதல்வரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் பூச்சிக்கொல்லி நடவு பொருட்கள் வழங்கல்



தஞ்சாவூர், செப்.10

நஞ்சில்லா உணவு உற்பத்தியினை விவசாயி களிடம் ஊக்குவிக்கவும் உறுதிப்படுத்தவும் வேண்டும் என்ற நோக்கில் தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் வட்டாரத்தில் உயிரி பூச்சிக் கொல்லி பண்புடைய செடிகளான ஆடாதோடா, நொச்சி, நடவு கன்றுகள் விவசாயிகளுக்கு 100% வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்ட மானது மீண்டும் இயற்கை பூச்சி விரட்டி பயன்பாட்டினை நடைமுறைக்கு கொண்டு வந்து விவசாயிகளுடைய விழிப்புணர்வு ஏற்படுத்தவும் ரசாயன பூச்சிக்கொல்லி மருந்து களின் பயன்பாட்டினை குறைக்கவும் மண் வளத்தை மேம் படுத்தி சுற்றுப்புறச் சூழலை பாதுகாத்திடவும் பூச்சி மற்றும் நோய்களை இயற்கை பூச்சி விரட்டிகள் தயாரித்து முன்கூட்டியே கட்டுப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் ஆடாதோடா, நொச்சி போன்ற இயற்கை பூச்சி விரட்டிகள் ஒரு விவசாயிக்கு வகைக்கு 25 வீதம் அதிகபட்சம் 50 கன்றுகள் 100% கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இயற்கையாகவே மதுக்கூர் வட்டாரத்தில் நெல் மற்றும் தென்னந்தோப்புகளை சுற்றிலும் நொச்சி செடிகள் வேலி களாகவே வளர்க்கப்பட்டு வருகிறது. மேலும் வீடுகளில் காய்ச்சல் போன்ற சிறு நோய்களை கட்டுப்படுத்தும் வகையில் கசாயம் தயாரித்து பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கில் வீடுகளில் வேலி ஓரங்களில் ஆடாதொடா வளர்த்து வருகின்றனர்.

ஆடாதொடா மற்றும் நொச்சி இலைகள் மனிதர்கள் உடல் நோவுக்கு மட்டுமே பயன்படுத்தி வருகின்றனர். விவசாயிகள் உற்பத்தி செய்யும் பயிர்களை குறைந்த செலவில் நோய் மற்றும் பூச்சிகளில் இருந்து பாதுகாத்து விவசாயிகளின் வருமானத்தை

உயர்த்துவதில் இரண்டு செடிகளின் இலைகள் முக்கிய பங்காற்றுகின்றன. ஆடாதொடா இலைகளில் வாசீனின் மற்றும் வாசினோன் போன்ற ஆல்கலாய்டுகள் அவற்றின் கசப்பு தன்மையால் சிறந்த பூச்சி விரட்டியாக பயன்படுத்த அறிவுறுத்தப் படுகிறது. மேலும் தானிய சேமிப்பு கிடங்குகளிலும் இவற்றை சிறந்த பூச்சி விரட்டியாக பயன்படுத்தலாம். இதற்கு விவசாயிகள் ஆடாதொடா, நொச்சி இலைகளை ஐந்து கிலோ அளவுக்கு பறித்து அரைத்து கூழாக்கி பின் 10 லிட்டர் தண்ணீரில் ஒரு நாள் முழுவதும் ஊற வைக்க வேண்டும். பின் இந்த மூலிகை கரைசலை வடிகட்டி வடிநீரை பூச்சி நோய் தாக்கப்பட்ட பயிர்களின் மீது தெளித்து பூச்சி நோய்களை கட்டுப்படுத்தலாம்.

மூலிகை பூச்சி விரட்டிகள் பயிர்களின் விளைச்சலை பெருக்கு வதுடன் வளர்ச்சி ஊகிகள் ஆகவும் செயல்படுகின்றன. புவி வெப்பமடைதல் பருவமழையின் மாறுபாடுகள் போன்ற நிகழ்வுகள் காரணமாக பயிர்களில் ஏற்படும் எதிர்பாராத பூச்சி நோய் தாக்குதல்கள் கட்டுப்படுத்த விவசாயிகள் பலவித பூச்சி மருந்துகளை நோய் மருந்துகளை பயன்படுத்தி அதனால் செலவினம் அதிகரிக்கிறது. இதனை கட்டுப்படுத்தி விவசாயி களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் பொருட்டு வருமுன் காக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக உயரிய பூச்சிக் கொல்லி பண்புகள் உடைய பாரம்பரிய தாவரங்களான ஆடாதொடா, நொச்சி நடவு கன்றுகள் பட்டுக்கோட்டை தென்னை நர்சரியில் இருந்து தோட்டக்கலைத் துறை மூலம் சப்ளை செய்யப்பட்டு தற்போது மதுக்கூர் வட்டாரத்தில் விரும்பும் விவசாயிகளுக்கு வேளாண் உதவி அலுவலர்கள் மூலம் பதிவேற்றம் செய்து வழங்கப்பட்டு வருகிறது.

விவசாயிகள் தாவரங்களை தரிசு நிலங்கள் வயல் வரப்புகளில் நடவு செய்து பரவலாக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. உயிரி பூச்சிக்கொல்லி நடவு கன்றுகள் தலா ரூபாய் 2 மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

மதுக்கூர் வட்டாரத்தில் வேளாண் உதவி அலுவலர்கள் ஜெரால்டு சுரேஷ் முருகேஷ் ராமு ஆகியோர் விவசாயிகளுக்கு தேவையான கன்றுகளை வழங்கினர். வேளாண் உதவி இயக்குனர் திலகவதி உயிரி பூச்சிக்கொல்லி நடவு குச்சிகளின் நன்மைகள் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். துணை வேளாண்மை அலுவலர் அன்புமணி உயிர் பூச்சிகள் செடிகளின் தன்மைகள் பற்றி விளக்கம் அளித்தார்.

# நெல் நடவு முறை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவிகள்



மதுரை, செப்.10

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், ப.அம்மாபட்டி ஊராட்சியில் திண்டுக்கல் மாவட்டம், காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைகழகத்தைச் சேர்ந்த இளநிலை வேளாண்மை இறுதியாண்டு பயிலும் மாணவிகள் சீ.மோனிகா, பி.கீர்த்தனா, கொ.மோ.பிரேமலதா, ஜோ.அமலயோஷ்னி மற்றும் ஆ.இந்துமதி ஆகியோர் ஊரக வேளாண்மை பணி அனுபவத் திட்டத்தின் கீழ் அவ்வூரில் தங்கி பயிற்சி பெற்று வருகின்றனர். 25x25 செ.மீட்டரில் நடவு செய்யக்கூடிய திருந்திய நெல் நடவு (SRI) தொழில்நுட்பம் மற்றும் அதன் பயன்களை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



# கிராமப்புற மதிப்பீட்டில் வேளாண்மை கல்லூரி மாணவர்கள்



விருதுநகர், செப்.10

விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு வட்டார வேளாண் உதவி இயக்குனர் தலைமையில் ஸ்ரீவில்லிபுத்தூர் கலச லிங்கம் வேளாண்மை மற்றும் தோட்டக் கலை கல்லூரியின் இறுதி ஆண்டு இளங்கலை வேளாண்மை துறை மாணவர்கள் ராஜதுரை, சஞ்சய், சந்தோஷ் குமார், சம்பு நாத்து, கேஸ்ட்ரோ, ஹரிஷ், தர்சன் மற்றும் மணிகண்டன் ஆகியோர் பாட ஆசிரியர் முனைவர் ஜெயந்தி மற்றும் குழு ஆலோசகர் கங்காதரனின் அறிவுரையின்படி சுந்தரபாண்டியன் பேரூராட்சியில் பங்கேற்பு கிராமப்புற மதிப்பீடு செய்தனர். இதில் சுந்தரபாண்டியம் பேரூராட்சியில் காலக்கோடு அடிப்படையில் அத்தி யாவசிய வசதிகள் எந்தெந்த வருடத்தில் செயல்படுத்தப்பட்டது என்பதை கிராம மக்களுக்கு சித்திரம் வாயிலாக பேரூராட்சி அலுவலகம் அருகே காட்சிப்படுத்துதல் மற்றும் விவசாயிகளின் வேலை குறிப்பு காட்சிபடுத்தபட்டது.

# அங்கக வேளாண்மையில் பிரம்மாஸ்திரா

அங்கக வேளாண்மையில் பிரம்மாஸ்திரா பூச்சி கட்டுப்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கிறது.

**பிரம்மாஸ்திரா தயாரிக்க தேவையான பொருட்கள்**

வேப்பிலை - 3 கிலோ, புங்க இலை - 2 கிலோ (அல்லது) சீத்தாப்பழ மர இலைகள் - 2 கிலோ, ஊமத்தை இலை - 2 கிலோ, மாட்டு கோமியம் - 10 லிட்டர், தண்ணீர் - 250 லிட்டர்.

- மேற்கண்ட இலைகளை இடித்து அதனை 10 லிட்டர் மாட்டுக்கோமியத்துடன் கலந்து கொதிக்க வைக்க வேண்டும். (20 முதல் 25 நிமிடங்கள்)

- இதிலிருந்து பெறப்படும் வடிநீரை 5-6 லிட்டர் எடுத்து அதனை 250 லிட்டர் தண்ணீருடன் கலந்து நீர்க்க செய்து, ஒரு ஹெக்டருக்கு தெளிக்கலாம். இவ்வாறு தெளிப்பதால் சாறு உறிஞ்சும் பூச்சிகள் மற்றும் புழுக்களின் இளம் பருவங்களைக் கட்டுப்படுத்தலாம்.

- அனைத்து பயிர்களுக்கும் உகந்தது என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி கேட்டுக்கொண்டுள்ளார் .


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# உயிர்மச் சான்று பெற விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்

விழுப்புரம் மாவட்ட விதைச்சான்று மற்றும் உயிர்மச்சான்று உதவி இயக்குநர் க.பாலசுப்ரமணியன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது, தற்போது அதிக அளவில் பூச்சிக்கொல்லிகள் பயன்படுத்துவதால் சுற்றுச்சூழலில் இயற்கை எதிரிகளான சிலந்தி, தட்டான், குளவி போன்றவற்றின் எண்ணிக்கை கணிசமாக குறைந்து வருகிறது. ரசாயன உரங்களினாலும், பூச்சி மருந்துகளாலும் உணவு சங்கிலி நஞ்சாக்கப்பட்டு அதிகளவில் சேமிக்கப்பட்டு பலவகையான புற்றுநோய், மண்ணின் வளம் குன்றுதல், சிறுபான்மை பூச்சிகள் பெரும்பான்மை பூச்சிகளாக மாறுதல் போன்ற பாதகங்கள் ஏற்படுகின்றது.

எனவே, இந்த சூழ்நிலையை கருத்தில் கொண்டு எதிர்கால சந்ததியை காக்க விவசாயிகள் நீடித்த நிலையான இயற்கை விவசாயத்திற்கு மாறுவது காலத்தின் அவசியம் ஆகும். இயற்கை விவசாயம் அல்லது அங்கக வேளாண்மை என்பது முற்றிலும் செயற்கை இடுபொருட்களான உரங்கள், பூச்சிக் கொல்லிகள், களைக்கொல்லிகள் மற்றும் மரபணு மாற்றப்பட்ட பயிர்களை தவிர்த்து இயற்கை எரு, பசுந்தாள் உரங்கள், மண்புழு உரம், பஞ்ச கவ்யம், வேம்பு தாவரங்கள் சார்ந்த இடுபொருட்களை பயன்படுத்தி செய்யப்படும் ஒரு தற்சார்பு முறையாகும்.

விவசாயிகள் இயற்கை விவசாயம் செய்வதை ஊக்குவிக்க மத்திய மற்றும் மாநில அரசுகள் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இயற்கை வழி விவசாயத்தில் விதை முதல் உற்பத்தி, அறுவடை, விளை பொருட்கள் விற்பனை வரை அனைத்து நிலைகளிலும் கடைபிடிக்க வேண்டிய சில தர நிர்ணயங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் இயற்கை விளைபொருட்கள் உற்பத்தி செய்தல், பதனிடுதல் மற்றும் விற்பனைக்கு மத்திய அரசின் தேசிய அங்கக வேளாண்மை திட்டத்தின்படி அபீடா நிறுவனத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் உயிர்மச்சான்று எனப்படும் இயற்கை வேளாண் சான்று வழங்கப்பட்டு வருகிறது.

உயிர்மச்சான்று பெற தனி நபராகவோ அல்லது குழுவாகவோ பதிவு செய்யலாம். மேலும் வனபொருட்களை சேகரிப்பு செய்பவர் களும் பதிவு செய்து கொள்ளலாம். பெரு வணிக நிறுவனங்களும் அங்கக பொருட்களை பதப்படுத்துவோர் மற்றும் ஏற்றுமதி செய்வோரும் பதிவு செய்யலாம். தனி நபர் சிறு, குறு விவசாயிகள் எனில் ரூ.2700/-ம், தனி நபர் பிற விவசாயிகள் எனில் ரூ.3200/ம், குழுப்பதிவு எனில் ரூ.7200/-ம், வணிக நிறுவனம் எனில் ரூ.9400/-ம் பதிவு கட்டணமாக செலுத்த வேண்டும்.

உயிர்மச் சான்றிதழ் பெற விண்ணப்ப படிவம் பண்ணையின் பொது விவர குறிப்புகள், பண்ணையின் வரைபடம், மண் மற்றும் பாசன நீர் பரிசோதனை விவரம், ஆண்டு பயிர் திட்டம், துறையுடனான ஒப்பந்தம் மூன்று நகல்கள், நில ஆவணம், வருமான வரி கணக்கு எண் அட்டை, ஆதார் அட்டை, புகைப்படம் மற்றும் உரிய கட்டணத்துடன் விண்ணப்பிக்கலாம். மேலும் விவரங் களுக்கு விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட உயிர்மச் சான்று ஆய்வாளர்கள், விதைச்சான்று மற்றும் உயிர்மச்சான்று உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

உயிர்மச் சான்று ஆய்வாளர்கள் தொடர்பு எண் : விழுப்புரம்-63825 01750, கள்ளக்குறிச்சி - 96261 76928.

# உழவர் செயலியை பயன்படுத்தும் முறை எடுத்துரைத்த வேளாண் கல்லூரி மாணவிகள்

திண்டுக்கல், செப்.10



திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் வட்டாரத்தைச் சேர்ந்த கதிரனம்பட்டி கிராமத்தில் காந்திகிராமம் பல்கலைக்கழக வேளாண் மற்றும் கால்நடை அறிவியல் கல்லூரியில் இளங்கலை வேளாண்மை பட்டப் படிப்பு பயிலும் மாணவிகள் புவனேஸ்வரி, பவானி, அக்ஷிதா, அபிதா தேவி ஆகியோர் தங்களின் ஊரக வேளாண்மை பணி அனுபவத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இதில் 'உழவர் செயலி' யில் உள்ள தமிழ் மண்வளம், மானியத் திட்டங்கள், இடுப்பொருள் முன்பதிவு பயிர் காப்பீடு விபரம், உரங்கள் இருப்பு நிலை, விதை இருப்பு நிலை, வேளாண் இயந்திரங்கள் வாடகை, சந்தை விலை நிலவரம், வானிலை அறிவுரைகள், உழவர் அலுவலர் தொடர்பு திட்டம், பயிர் சாகுபடி வழிகாட்டி, இயற்கை

விவசாய விலைப் பொருட்கள், அணை நீர்மட்டம், வேளாண் செய்திகள், பூச்சி மற்றும் நோய் கண்காணிப்பு பரிந்துரை, அட்மா பயிற்சி மற்றும் செயல் விளக்கம் உழவர் இ–சந்தை, பட்டு வளர்ச்சித் துறை, வேளாண் நிதிநிலை அறிக்கை, கலைஞரின் வேளாண் வளர்ச்சி திட்டம், கால்நடை மருத்துவர், பசுமை இயக்கும் மரக்கன்றுகள். இத்தகைய விவரங்களையும் அவற்றை பயன் படுத்தும் முறைகள் பற்றிய விழிப்புணர்வை இளைஞர்கள் மற்றும் விவசாயிகளிடம் ஏற்படுத்தினர். இதில் அட்மா திட்ட மேலாளர் பொன் தமிழரசு கலந்து கொண்டு சிறப்பித்தார்.


